# பாட்டாளி சிந்தனை


Volume 33 No 9

May 2023

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**S U C I (Communist)**

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ் விலை ரூ 5





**5 ஆகஸ்டு 2022 – 5 ஆகஸ்டு 2023**

**எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளர் தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டை அனுசரிப்போம்**

**“ஒரு கட்சி உன்னதமான தத்துவங்களைப் பற்றிப் பேசுகிறதா இல்லையா என்பது அவ்வளவு முக்கியமல்ல. அக்கட்சி போதிக்கும் தத்துவம் உண்மையிலேயே உன்னதமானதா, இல்லையா என்பதை நிரூபிப்பது உயர்ந்த நெறிகளை, கலாச்சாரத்தை அக்கட்சியின் தலைவர்களும், தொண்டர்களும், ஆதரவாளர்களும் தங்கள் சொந்த வாழ்க்கையிலும், அன்றாட நடவடிக்கையிலும் அரசியல் பணிகளிலும் பிரதிபலிக்கிறார்களா இல்லையா என்பதுதான்.”**

**“வெறுமனே விஷயங்களை அறிந்து கொள்வதில் அர்த்தமில்லை என்பதை முதன்முதலில் சுட்டிக்காட்டிய தத்துவம் மார்க்சிசம் மட்டுமே ஆகும். நடைமுறையில் கடைபிடிக்க முடியவில்லை என்றால் வெறுமனே அறிந்துகொள்வதால் என்ன பயன்? உலகைப் பற்றி அறிந்துகொண்டு விளக்குவது மட்டுமே அல்ல, உலகை மாற்றுவதும் தத்துவத்தின் கடமையாகும்.”**

**– சிப்தாஸ் கோஷ்**

## பள்ளிகளில் டார்வின் பாடம் நீக்கப்பட்டது குறித்து

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் 22.04.2023 அன்று வெளியிட்ட அறிக்கை:*

பாஜக மத்திய அரசாங்கம் மாபெரும் விஞ்ஞானி டார்வின் கண்டுபிடித்த பரிணாம வளர்ச்சி பாடத்தை பள்ளிப்பாடத்திலிருந்து நீக்கிய செயல், அறிவியல்மீதும் அறிவியல் மனப்பான்மை மீதும் நடத்தப்பட்ட தாக்குதல் மட்டுமல்ல, நாட்டின் இளைய தலைமுறையினரை குருட்டு நம்பிக்கையும் தர்க்கத்திற்கு புறம்பான சிந்தனையும் இணைந்த வினோத மனப்போக்கில் தள்ளும் நயவஞ்சக ஃபாசிச திட்டமாகும்.

இந்திய மறுமலர்ச்சியாளர்களின், சுதந்திரப்போராட்ட வீரர்களின் கனவுகளை மதிக்காமல் நமது கல்வி முறையை முற்றிலுமாக குலைக்கும் இச் செயல் நட்டு மக்களின் சிந்தனை முறையையும் கலாச்சாரத்தையும் முழுமையாக ஃபாசிசமயமாக்கும் இம் முயற்சி குறித்து நாம் ஆழ்ந்த கவலை கொண்டாக வேண்டும்.

கல்வி பெறுவதன் மூலம் பகுத்தறிவு கொண்ட மனிதனை உருவாக்கும் போக்கையே அழிக்கவிருக்கும் இந் நயவஞ்சக நடவடிக்கையை முறியடிக்க ஜனநாயக, மதச்சார்பற்ற எண்ணம் கொண்ட, கல்வியை நேசிக்கும் அனைவரும் குரலெழுப்ப முன்வரவேண்டும் என்று நாங்கள் அறைகூவி அழைக்கிறோம்.

## இந்தியாவில் இளைஞர்கள் சந்திக்கும் பிரச்சினைகளும் தீர்வும்

*[தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டான இவ்வருடத்தை அனுசரிக்கும் வகையில் அவரது படைப்புகளிலிருந்து சில அம்சங்களை பிரசுரித்து வருகிறோம். அவ்வகையில், தோழர் சிப்தாஸ் கோஷ் மேற்கு வங்க தோழர்களிடம் “கலாச்சார சீரழிவும் வேலையின்மைப் பிரச்சினையும்” என்ற தலைப்பில் ஆற்றிய உரையின் ஒரு சிறிய பகுதியை இங்கு வழங்குகிறோம்.]*

நண்பர்களே!

அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கத்தின் ஸ்தாபகதினக்கூட்ட நிகழ்வின் இந்த சந்தர்ப்பத்தில், நாட்டின் அரசியல் கலாச்சார சூழ்நிலைமை குறித்தும் இளைஞர்கள் எதிர்நோக்குகின்ற கடமைகள் குறித்தும் உரை நிகழ்த்துமாறு நான் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறேன். தற்போதைய அரசியல் நிலைமை குறித்துப் பேசவிருக்கின்றபோது எல்லாவற்றிற்கும் முன்பாக, அரசியல் குறித்த கேள்வி என்பது (Political question) அரசின் குணாம்சம் (Character of the State) குறித்த கேள்வியுடன் பிரிக்கவியலாதபடி பிணைந்திருக்கிறது என்பதை வலியுறுத்திட விரும்புகின்றேன். அதாவது, அரசியல் சூழ்நிலைமையைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு முதலில் அரசின் இயல்பு மற்றும் குணாம்சத்தினை முதலில் பரிசீலித்துப் பார்க்கவேண்டும்.


தொடர்ச்சி 2ம் பக்கம்


## எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் 76வது ஸ்தாபக தின அறைகூவல்!

## உலக சூழலை மாற்றியமைக்க மார்க்சிசம்-லெனினிசம் சிப்தாஸ் கோஷ் சிந்தனையை கற்றுணர்ந்து வலிமைமிக்கதோர் போராட்டத்தை வளர்த்தெடுப்பீர்!

கடந்த ஏப்ரல் 24ஆம் தேதியன்று சென்னை புரசைவாக்கம் தாணா தெருவில் கட்சியின் 76வது ஸ்தாபக தினப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு கட்சியின் மாநில அமைப்புக் கமிட்டி உறுப்பினரும் சென்னை மாவட்ட செயலாளருமான தோழர் சந்திரன் தலைமையேற்றார். கட்சியின் மாநில செயலாளரும் மத்திய கமிட்டி உறுப்பினருமான தோழர் ரெங்கசாமி சிறப்புரையாற்றினார். மாநில அமைப்புக் கமிட்டியின் மற்றொரு உறுப்பினரான தோழர் எம் ஜெ வால்டேரும் உரையாற்றினார்.

முதலாவதாக பேசிய தோழர் வால்டேர் மத்திய பாஜக அரசாங்கம் எவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக மக்கள் விரோதக் கொள்கைகளை அமுல்படுத்தி வருகிறது என்பதையும் குறிப்பாக தேசிய கல்விக் கொள்கை 2020ஐ கொண்டுவந்ததன்மூலம் நம் விடுதலை இயக்கத்தின் மாமனிதர்கள் உயர்த்திப்பிடித்த ஜனநாயகபூர்வ, அறிவியல்பூர்வ, மதசார்பற்ற கல்வியை முற்றிலும் அழித்தொழிக்க முற்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார். தேசிய கல்விக் கொள்கையை எதிர்ப்பதாக கூறிக்கொண்டு ஆனால் அக்கல்விக் கொள்கையின் சாராம்சம் அனைத்தையும் தமிழகத்தில் முந்தைய அதிமுக




**சென்னையில் ஏப்ரல் 24, 2023 அன்று நடைபெற்ற கட்சியின் ஸ்தாபக தினக்கூட்டம்**


தொடர்ச்சி 7ம் பக்கம்

## இந்தியாவில் இளைஞர்கள் சந்திக்கும் பிரச்சினைகளும் தீர்வும் . . .

# நீதிநெறி, ஒழுக்கம், சட்டங்கள், பொருளாதார கொள்கைகள், சிந்தனை ஆகிய அனைத்தையும் முதலாளித்துவ சமூக அமைப்புக்கு ஏற்றவாறு வடிவமைக்கிறார்கள்

*1ம் பக்கத் தொடர்ச்சி*

...வர்க்கப்பிளவு கொண்ட சமுதாயத்தில் எந்த வர்க்கம் அரசு அதிகாரத்தில் இருக்கின்றது என்பதனை முதலில் நாம் தீர்மானித்தாக வேண்டும் அல்லது வேறு வார்த்தையில் சொன்னால் பிரதானமாக எந்த வர்க்கத்தின் நலன்களின் பொருட்டு அரசு இயக்கப்படுகின்றது என்பதை முதலில் நாம் தீர்மானித்தாக வேண்டும். ...நம்நாட்டில் தற்போதிருந்துவரும் அரசமைப்பு முறை அல்லது பொருளாதார அமைப்புமுறை, சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் முன்னோக்கிய மேம்பாட்டிற்கும் துணை செய்வதாக இருக்கிறதா அல்லது பெரும் தடையாக அமைந்திருக்கிறதா என்பதுதான் இங்கே ஆராய்ந்தறியப்பட வேண்டிய பிரச்சினையாக இருக்கிறது. ஆனால், ஒர் வர்க்கப்பிளவு கொண்ட சமுதாயத்தில் இக்கேள்வி குறித்து ஆராய்ந்து அறியப்புகுந்தால் அதில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இருவர்க்கக் கண்ணோட்டங்கள் இல்லாமல் இருக்கமுடியாது. எனவே அவ்வாறு நீங்கள் ஆராய்ந்தறியப் புகுவதற்கு முன்னால் மேற்குறிப்பிட்ட இருவர்க்கங்களில் ஏதேனும் ஒரு வர்க்கக் கண்ணோட்டத்தினை நீங்கள் அளவுகோலாகத் தேர்வு செய்ய வேண்டியிருக்கும். ...சமுதாயம் ஆளுபவர்கள் என்றும் ஆளப்படுகிறவர்கள் என்றும் பிளவுபடுத்தப்பட்டதாக இருந்துவருகிறது. இது மிக வெளிப்படையான ஒர் உண்மை. கோடிக்கணக்கான மக்கள் ஒருபுறம் தங்களின் உழைப்பு சக்தியைக் கொடுத்து அதன்மூலம் கிடைப்பதைக்கொண்டு வாழ்ந்துவருகிறார்கள். மறுபுறம் கையளவு சுரண்டுபவர்கள் நாட்டில் உள்ள செல்வங்கள் அனைத்தையும் தங்கள் உடைமையாக்கி கட்டுப்பாட்டில் வைத்திருக் கிறார்கள். மேலும் மனித உழைப்பால் உருவாக்கப்பட்டு மேலும்மேலும் அதிகரிக்கப் படுகின்ற செல்வம் அனைத்தையும் அவர்கள் லாபமாக அபகரித்து வருகிறார்கள். அச்செல்வம் பொதுமக்களின் நன்மைக்காக கொண்டுசேர்க்கப் படவில்லை. ஆகையினால் வறுமை மேலும் உக்கிரமடைகிறது. கூடவே, பெரும் கலாச்சார சீரழிவும் நம்மைச் சூழ்ந்துகொள்கிறது. சமுதாயம் சுரண்டுபவர்கள் சுரண்டப்படுபவர்கள் என்று அடிப்படையில் பிளவுபடநேரிட்டமை, அதுபோல் நிகழவேண்டுமென்று சிலர் விரும்பியதனால் அல்ல. ...சமூகம் வர்க்கங்களாகப் பிளவுண்ட காலத்திலிருந்து உற்பத்தியையும் விநியோகத்தையும் பங்கீட்டை ஆதாரமாகக் கொண்டு, சமூக உற்பத்தி சக்திகள் என்ற வகையில் அறிந்தோ அறியாமலோ, விரும்பியோ விரும்பாமலோ நாமும் ஏதேனும் ஒரு வர்க்கத்தின் நலன்களுடன் பிணைக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றோம். ஏனெனில் மனிதன் ஒரு சமூக உற்பத்திசக்தி என்ற முறையில் ஏதேனும் ஒரு வடிவத்தில் உற்பத்திஉறவுகளுக்குள் நுழையாமல் நாம் வாழமுடியாது. வாழ்க்கைத் தேவைகளான உணவு, உடை, கல்வி போன்ற அத்தியாவசியங்களைப் பெறுவதற்காக உற்பத்தி அமைப்பு முறையோடு ஏதேனும் ஒரு வடிவத்தில் நாம் உறவில் பங்கேற்க வேண்டியிருக்கிறது. இந்த உறவின் காரணமாக சுயவிருப்பத்துடனோ அல்லது விருப்பமின்றியோ நாம் இந்த (சுரண்டும்) அல்லது அந்த (சுரண்டப்படும்) வர்க்கத்தின் நலனோடு பிணைக்கப்பட்டிருக்கிறோம். சமூகத்தில் பரஸ்பரம் முரண்பட்ட இருவர்க்கங்கள், முரண்பட்ட வர்க்க நலன்களைக் கொண்டிருக்கின்றன.

சுரண்டும் வர்க்கம், நிலவும் சமூக அமைப்பைத் தொடர்ந்து நிலைபெறச்செய்வதற்காக மதம் சார்ந்த நடவடிக்கைகளையும், பழைய சமூகக் கட்டுத் திட்டங்களையும் ஊக்கப்படுத்தி வளர்க்கிறார்கள். இலட்சியங்கள் நீதிநெறி, ஒழுக்கம், சட்டங்கள், பொருளாதார கொள்கைகள் மற்றும் சிந்தனை ஆகிய அனைத்தையும் அதற்கேற்றவகையில் வடிவமைக்கிறார்கள். மேலும் இந்த சமூக அமைப்பிற்குச் சாதகமான வகையில் விவாதங்களையும் கட்டவிழ்த்துவிட்டு கருத்தைப் பரவலாக்குகிறார்கள். ஆம்! அவர்கள் இதை மனிதாபிமானம் என்றபெயராலும் அனைத்தும் மனிதயினத்தின் நன்மைக்கானது என்று பறைசாற்றிக் கொண்டும் செய்து வருகிறார்கள். ஆனால் தங்களது சொந்த வர்க்கநலனையும், ஆட்சியதிகாரத்தையும் தொடர்ந்து நிலைபெறச்செய்வதற்காகவே அவர்கள் இதனைச் செய்துவருகிறார்கள்.

...அதைப்போலவே யாரெல்லாம் இச்சமூகத்தில் சுரண்டப்படும் வர்க்கமாக இருக்கிறார்களோ அவர்கள் சுரண்டலிலிருந்து விடுதலையை வென்றெடுப்பதற்காக இந்த சுரண்டல் அரசு மற்றும் சமூக அமைப்பைத் தூக்கியெறிய விரும்புகிறார்கள். ஏனெனில் அதன்மூலம் இந்த ஒடுக்கப்பட்ட பெரும்பான்மை வர்க்கம் மகிழ்வான, கண்ணியமான வாழ்வையும், அனைத்து வகையிலுமான பொருளாதார மேம்பாட்டையும், கலாச்சார வாழ்க்கையின் முழுமையான கதவுகளும் அவர்களுக்குத் திறக்கப்படலாம். ஆகையினால் வர்க்கப்பிளவு பட்ட சமுதாய வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் சுரண்டப்படுகின்ற வர்க்கம் எப்பொழுதும் சுரண்டும் வர்க்கத்தின் அரசு மற்றும் சமூக அமைப்பைத் தூக்கியெறிய விரும்புகிறது.

...சமுதாயப்பிளவு என்பது சுரண்டுபவர், சுரண்டப்படுபவர் என்று ஆன காலத்திலிருந்து சுரண்டும் வர்க்கத்திற்கும் சுரண்டப்படும் வர்க்கத்திற்கும் இடையிலான அடிப்படை முரண்பாடு தொடர்ந்து சமுதாயத்தில் செயல்பாட்டில் இருந்துவருகிறது. பொருளாதாரம், அரசியல், சமூக மற்றும் கலாச்சாரத்துறைகளிலும் இந்த இரண்டு பகைகொண்ட சமூகசக்திகளுக் கிடையிலான முரண்பாடு இடையறாது செயல்பாட்டில் இருந்துவருகிறது. இந்த பகைகொண்ட முரண்பாடு ஒரு கட்டத்தில் உச்சத்தினை அடைகிறபொழுது, வெளிப்படையான மோதலாகவும் அல்லது புரட்சியாகவும் மாறுகிறது. இறுதியாக, பழைய சமூக அமைப்புமுறை, பழைய ஒழுங்கு அழித்தொழிக்கப்பட்டு அவ்விடத்தில் புதிய அரசு மற்றும் புதிய ஒழுங்கு நிறுவப்படுகிறது.

... சமூக ஒழுங்குமுறைகள், விதிமுறைகள் சட்டங்கள், கல்விமுறை, கலாச்சாரம் என நாம் அறிந்த அனைத்தும் ஒரு குறிப்பிட்ட பொருளாதார அமைப்புமுறையின் அடித்தளத்தில் அமைந்திருக்கும் மேற்கட்டுமானத்தின் அங்கங் களாகும். நிர்வாகம், நீதித்துறை, ராணுவம் ஆகியவை அடங்கிய ‘அரசு’ என்பது இவை அனைத்தையும் பாதுகாக்கிற ஒரு கருவியாகும். இதன்மூலம், சுரண்டுபவர்கள் தங்களின் அனைத்து நிறுவனங்களையும் பாதுகாத்துக் கொள்வதுடன் பொருளாதாரம், அரசியல், சமூக மற்றும் கலாச்சாரத் துறைகள் அனைத்திலும் தங்களின் நலனுக்கான இயக்கத்தை நடத்திவருகிறார்கள். ஆகவே அரசு என்பது ஒருவர்க்கப்பிளவுபட்ட சமுதாயத்தில் அதிகாரத்தைப்பிரயோகம் செய்யத் தன்வசம் வைத்திருக்கின்ற மிகச்சக்திவாய்ந்த ஆயுதமாகும். வரலாற்றை அறிந்தமட்டிலும் இந்த உண்மையை மறுப்பதற்கு எவ்வழியும் இல்லை. ...ஆகையினால் நாட்டின் இன்றைய அரசியல், பொருளாதார, கலாச்சார சூழ்நிலைமையினை மிகச்சரியாக மதிப்பீடு செய்வதற்கு முதலில் சுரண்டப்படுபவர்கள் அல்லது சுரண்டுபவர்கள் என்ற இரு வர்க்கக் கண்ணோட்டங்களில் எந்த ஒன்று பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்கு நமக்கு வழிகாட்டவேண்டும் என்பதை மிகச்சரியாகத் தீர்மானிக்கவேண்டும்.

...நாடு என்று எதைச் சொல்கிறோம்? 52 கோடி மக்கள்தொகை கொண்ட நாட்டில் (1970 இல்) தங்கள் உழைப்பால் வாழ்க்கை நடத்துகின்ற அயராக உழைப்பால் செல்வத்தை உற்பத்தி செய்கின்ற 50 கோடி மக்கள் குறித்தா பேசுகிறோம்? நமது நாட்டின் நிகழ்காலம் எதிர்காலம் என்று நாம் அக்கறைப்படுகிறபோது அறிவுத்துறையினர் துவங்கி கிராமப்புற பாமர விவசாயிகள் மற்றும் நிலமற்ற கூலித் தொழிலாளர்கள் சகிதம் அனைவரையும் உள்ளடக்கிய பெரும்பகுதியினரின் நலன், எதிர்காலம் மற்றும் அவர்களின் மேம்பாடு குறித்த அக்கறையை மனதில் கொண்டா பேசுகிறோம்? அல்லது நாட்டின் ஒட்டுமொத்த செல்வத்திற்கும் தங்களை உடைமையாளர்களாக அறிவித்துக்கொண்டு உழைப்பு சக்தியையும், மக்கள் உழைப்பையும் சுரண்டி லாபம் குவித்துவரும் வெறுமனே 2 அல்லது 3 கோடிப்போர்களாக இருக்கின்ற சுரண்டும் சிறுபான்மை ஒடுக்குமுறை அதிகார வர்க்கத்தின் நலன்களை மனதில் கொண்டு பேசுகிறோமா? ஒரு வர்க்கப்பிளவு கொண்ட சமுதாயத்தில் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் ஒரே நலன் என்று ஒன்று இல்லை. அதாவது இரண்டு வர்க்கங்களுக்கும் பொதுவான நலன் என்று ஒன்று இல்லை. நாம் தேசபக்தி எனப் பேசுகிறபோது அது முதலாளித்துவ வர்க்கத்தின் அல்லது உடைமையாளர்களின் நலன் பற்றியதாக இருக்கிறதா அல்லது மக்களில் சுரண்டப்படும் வெகுஜனங்களின் நலன்பற்றியதாக இருக்கிறதா? மேலும் யாரெல்லாம் தேசமுன்னேற்றம் தேசத்தின் வளர்ச்சி என்று எவ்வித வர்க்க நலன் குறித்த குறிப்பிடுதல் இன்றி, இவையனைத்தும் வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டது என்ற அர்த்தம் தொனிக்கப் பேசுகிறார்களோ அவர்கள் ஒன்று நேர்மையற்ற ஏமாற்றுக்காரர்களாக இருக்க வேண்டும் அல்லது சாதாரண அப்பாவியாக இருக்கவேண்டும்.

...ஒவ்வொரு சகாப்தத்திலும் சுரண்டப்படும் மக்கள்தான் அறிவைப் பயிற்றுவித்து வளர்த்தெடுக்கும் பணியை முதன்மையாகச் செய்திருக்கிறார்கள். சுரண்டுபவர்களும்கூட அறிவைப் பயிற்றுவித்து (அறிவியலை) வளர்த்திருக்கிறார்கள் ஆனால் அதன் நோக்கம் அவர்கள் தங்கள் சுரண்டல் அமைப்புமுறையைப் பராமரிப்பதற்கும், அதனைத்தொடர்ந்து மேலுயர்த்திக்கொள்ளும் பொருட்டும், தங்களது போர்த் தளவாடங்களைப் பலப்படுத்திக் கொள்வதற்காகவும் அரசின் அடக்குமுறைக் கருவிகளை இதுவரை இல்லாத அளவிற்குக் கொடுமையானதாகவும் வன்மையானதாகவும் ஆக்கிக்கொள்வதற்கும், தங்களது ஏற்றுமதி இறக்குமதி வணிக, வர்த்தக நடவடிக்கைகளை அதிகரித்துக் கொள்வதற்கும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை இன்னும் அதிக ஆடம்பரமாக்கிக் கொள்வதற்கும் அவசியமான மட்டிலும் அதைச் செய்தார்கள். ஆனால் எல்லா சகாப்தத்திலும் சுரண்டப்படும் வர்க்கம் மனிதன் வாழ்வதற்கும் உண்மையை அறிந்து கொள் வதற்கும் என்ற நோக்கத்தின் உத்வேகத்தினால் உந்தப்பட்டு அறிவுத்துறையினை ஆழமாகவும் அதன் அனைத்து நுட்பமான விவரங்களுடனும் கற்றுணர்ந்து பயிற்றுவித்தார்கள். சுரண்டப்படும் மக்களின் விடுதலைகுறித்த கேள்வியானது சமுதாய மேம்பாடு மற்றும் சமூகப்புரட்சி குறித்த கேள்வியுடன் ஒவ்வெரு சகாப்தத்திலும் இணைந்திருந்ததால் சுரண்டப்படும் வர்க்கம் உண்மையை அறிந்து கொள்வது அவசர அவசிய நோக்கமாக இருந்தது. ஆனால் மறுபுறம் சுரண்டும் வர்க்கத்தின் தேவை உண்மையை ஒடுக்குவதாக இருக்கிறது. ஏனெனில் மக்கள் தாங்கள் ஏன் இவ்வாறு பல்வேறுபட்ட பிரச்சினைகளாலும் பீடிக்கப்படுகிறோம் என்றும், இளைஞர்கள் தாங்கள் ஏன் வேலையின்மையில் அவதியுறு கிறோம் என்றும் அதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன என்றும் உண்மையை அறிந்து கொண்டுவிடுவார்களேயானால், பின்னர் ஒருநாளில் அவர்கள் வெடித்தெழுவார்கள். அப்பொழுது அவர்களைத் தடுத்துநிறுத்த ஆளும் வர்க்கம் மேற்கொள்ளும் எவ்வித வசீகர

தொடர்ச்சி 3ம் பக்கம்

## இந்தியாவில் இளைஞர்கள் சந்திக்கும் பிரச்சினைகளும் தீர்வும் . . .

# சோசலிசப் புரட்சியின் மூலமே இளைஞர்களின் பிரச்சினைகளை தீர்க்கமுடியும்

2ம் பக்கத் தொடர்ச்சி

வார்த்தைகளும், புத்திசாலித்தனமான பேச்சுகளும், அரசியல் தந்திரங்களும் அவர்கள் முன்பு எடுபடாது. ஆகையினால் தான் சுரண்டுபவர்கள் மற்றும் அவர்களது அரசியல் ஏஜெண்டுகளும் தொடர்ந்து உண்மையை மறைப்பதற்காக, திட்டமிட்ட பொய், தந்திரங்கள் மற்றும் ஏமாற்றுத்தனங்களைச் செய்துவருகிறார்கள்.

எனவேதான், சுரண்டப்படும் வெகுஜனங்கள் விடுதலைபெறும் ஏக்கத்தினால் உந்தப்பட்டு ஒவ்வொரு சகாப்தத்திலும் பருண்மையாக உண்மையை அறிந்து கொள்வதற்காக அனைத்து விவரங்களுடன் அறிவைப்பயிற்றுவித்து வளர்ப்பதில் எப்பொழுதும் ஈடுபட்டுவருகிறார்கள். ஆகவே நாட்டில் நிலவிவரும் சூழ்நிலைமையைப் புரிந்துகொள்ள சுரண்டப்படும் வர்க்கத்தின் கண்ணோட்டத்திலிருந்தும் அதாவது தொழிலாளர்கள், விவசாயிகள், நடுத்தரவர்க்கத்தினர், அறிவுத்துறையினர் நலன்களிலிருந்தும் மற்றும் வரலாறு அறிவியலின் உதவியினைத் தேடிப் பெற்றும் புரிந்துகொள்ளவேண்டும். அதாவது, அரசமைப்பு முறையையும் நாட்டின் அரசியல் சூழ்நிலைமையையும் புரிந்துகொள்வதற்கு நாம் முதலில் அரசின் குணாம்சத்தினைப் புரிந்து கொள்ளவேண்டும் அதாவது எந்த வர்க்கம் அல்லது வர்க்கங்கள் அரசதிகாரத்தில் இருக்கின்றன, எந்த வர்க்கங்களின் நலன்களுக்கேற்ப அரசு இயக்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். அதேநேரத்தில் அந்த அரசின் பொருளாதார அடித்தளத்தின் குணாம்சம் அதாவது நாட்டில் நிலவும் பொருளாதார அமைப்புமுறையின் இயல்பு மற்றும் குணத்தன்மையை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

அரசுக்கு வர்க்ககுணம் இல்லை அல்லது அரசு என்பது அனைத்து மக்களுக்கானது அரசு வர்க்கத்தினின்றும் மேலிருப்பது அதாவது அரசு வர்க்கத்திற்கு அப்பாற்பட்டது என்றெல்லாம் வாதம் செய்கிறவர்கள் மிகமோசமான ஏமாற்றுக்காரர்கள், அல்லது பொய்யர்கள் ஆவர். இவ்வாறாக அவர்கள் அரசின் புரட்சிகரமான மாற்றம் குறித்த வரலாற்றையே மூடிமறைக்க முயலுகிறார்கள். அரசு வானத்திலிருந்து வந்து விழவில்லை அல்லது கடவுள் நேரேவந்து உருவாக்கித்தரவில்லை. மனித நாகரிக வளர்ச்சிப்போக்கு மற்றும் உற்பத்தியின் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில் அரசு தோன்றியது. மேலும் யாரெல்லாம் அரசின் தோற்றம்குறித்த இந்த வரலாறு அறிந்திருக்கிறார்களோ அவர்கள் புராதன நாடோடிச் சமூகத்தின் சமூகச்சொத்தின் மீது பலாத்காரமாகத் தனிநபர் அல்லது தனியார் உடைமை நிறுவப்பட்டபொழுது, ஒடுக்குமுறை மற்றும் சுரண்டலின் கருவியாக ஆளும்வர்க்கம் தனது வர்க்க அதிகாரத்தையும் உடைமையையும் பாதுகாத்திடும் பொருட்டாக அரசு என்ற அமைப்பை உருவாக்கி இருத்தல் நிலைக்கு வந்தார்கள் என்பதை அறிவார்கள். பின்பு நீண்டகால பரிணாம வளர்ச்சி மற்றும் புரட்சிகர மாறுதலைக்கொண்ட செயல்முறைப்போக்கின் வழியாக அரசு இன்றைய நவீன அரசாக வளர்ச்சியடைந்திருக்கிறது. எவரொருவரும் இந்த உண்மையை மறுக்கவியலாது. ஆகவே இந்திய அரசின் வர்க்க குணாம்சம் மற்றும் இந்தியப் பொருளாதார அமைப்புமுறையின் அடிப்படை குணாம்சம் மற்றும் அதன் தனிப்பட்ட அம்சங்கள் ஆகியவற்றை புரிந்துகொள்ளத் தவறிவிடுவோமேயானால், இவையாவற்றையும் மிகச்சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லையெனில் இன்று நிலவிவரும் சுரண்டலின் தன்மையினையும் புரிந்துகொள்ள முடியாது; வேலையின்மைப் பிரச்சினை, கலாச்சார சீரழிவு ஒழுக்கக்கேடு மற்றும் பிறயாவற்றின் உண்மையான காரணங்கள் யாதென்றும் தீர்மானிக்கவியலாது. மேலும், பல இலட்சக்கணக்கான இளைஞர்கள் எவ்வித வேலைவாய்ப்புமின்றி இருப்பதற்கான உண்மையான அடிப்படைக்காரணம் எங்கிருக்கிறது



சிப்தாஸ் கோஷ்

என்பதையும் இவை எந்தெந்தப் பிரச்சினைகளோடு பிரிக்கவியலாதபடி பிணைந்திருக்கின்றன என்பதையும் நம்மால் புரிந்து கொள்ளமுடியாது. அதன்காரணமாக, அந்தப் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பதில் சரியான வழிமுறையினை உருவாக்குவதில் நாம் தோல்வியுறுவோம். இதன் ஒரு தொடர் விளைவாக, போராட்ட இயக்கங்களை தோற்றுவிக்கும் இலக்குடன் மட்டும் அணிதிரண்டு முழக்கமிட்டுக் கொண்டிருப்பதைத்தான் நாம் அனைவரும் செய்துகொண்டிருக்கப்போகிறோம்.

...நம் எதிரி யார், நண்பர்கள் யார், எங்கே மிகச்சரியாக நாம் தாக்குவது, தாக்குதலை எதைநோக்கிச் செலுத்துவது, நமது பிரச்சினைகளுக்கான இறுதித்தீர்வைநோக்கி எப்படி எவ்வழியில் போராட்ட இயக்கங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதையெல்லாம் தீர்மானிக்க நாம் தவறி விடுவோமேயானால் பின்னர் வெறுமனே ஆயிரம்முறை கூக்குரலிட்டு அரற்றிக்கொண்டு பிரதான எதிரியை விடுத்து அங்குமிங்குமாகத் தாக்குதல் தொடுத்துக் கொண்டிருந்தால் இவையனைத்தும் வீண் செயல்பாடுகளாகவே முடிவுறும். இம்மாதியான செயல்பாடுகளின் விளைவாக மேலும் என்ன நிகழும்? மக்களிடம் பொதிந்திருக்கின்ற தாக்குதல் தொடுப்பதற்கான ஆற்றலும் மிக எளிதாகத் திசைதிருப்பப் பட்டுவிடும். எவ்விதப் பிரயோஜனமும் இல்லாத இடத்தில் தாக்குதல் தொடுத்துக் கொண்டிருப்பது மக்கள் சக்தியை வீணடித்து, தற்காலிகத் தன்மை கொண்டதாயினும்கூட தாக்குதல் தொடுக்கும் சக்தியும்கூட மழுங்கடிக்கப்பட்டுவிடுகிறது. பிரயோஜனமான எவையும் சாதிக்கப்படுவதில்லை. ஆனால் தன் கடுமையான எதிர் விளைவாக போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டவர்களை ஆழ்ந்த விரக்தி பற்றிக் கொள்கிறது. அவ்வாறாக விரக்திக்கு ஆட்பட்டவர்கள் நாம் இம்மாதியான எல்லாப் போராட்டங்கள் மற்றும் இன்னல்களைக் கடந்துவந்தோம் பலமுறை சிறைத்தண்டனையால் துன்பங்களையும் அனுபவித்தோம், தியாகங்களைச் செய்தோம் பலரும் தங்கள் உயிரையும் கொடுத்தார்கள் ஆனால் எல்லாவற்றிற்கும் முடிவாக என்னநடந்தது? முன்பிருந்ததைப் போலவே இளைஞர் பிரச்சினைகள் இன்றும் இருந்துவருகின்றன, வேலையின்மைப் பிரச்சினையும் முன்போலவே தொடர்கிறது.

...முதலாவதாக, இந்திய அரசின் குணாம்சம் என்ன? அல்லது எந்தவர்க்கம் அல்லது வர்க்கங்கள் ஆட்சியதிகாரத்தில் இருக்கின்றன? இரண்டாவது, இந்தியப் பொருளாதார அமைப்புமுறையின் குணாம்சம் என்ன? அதன் தனிப்பட்ட அம்சங்கள் என்ன? திருத்தல்வாத மற்றும் பூர்ஷ்வா சிந்தனைகளிலிருந்து நம்மை நாமே விடுவித்துக்கொண்டு இந்த இரண்டு கேள்விகளுக்கு நம்மால் பதில் தரமுடிந்தால் நாம் சரியான புரட்சிகர பாதையினை கண்டறியமுடியும்.

தற்பொழுது நம் நாட்டில் நிறுவப்பட்டுள்ள அரசின் குணாம்சம் மற்றும் பிரத்யேகமான அம்சங்களை ஆய்வுசெய்வோம் அரசியல் சொற்பிரயோகத்தின்படி இதனை என்ன வகையான அரசு என்று நாம் அழைக்கமுடியும்? வரலாற்று மாணவர்கள் என்ற முறையில் அரசு என்பது நிலவிவரும் பொருளாதார அமைப்பு முறையின் அடித்தளத்தில் அமைந்திருக்கும் ஒரு மேற்கட்டுமானமாகும் என்பதை நாம் அறிவோம். ஆளும் வர்க்கத்தின் கைகளில் இருக்கின்ற இந்த மிகச்சக்திவாய்ந்த சாதனமானது அதன் வர்க்க மேலாதிக்கத்தை அமல்படுத்துவதற்கான ஆயுதமாகும். அதேநேரத்தில் நாம் மனதில் கொள்ளவேண்டிய விஷயம் என்னவெனில் வர்க்கப்போராட்டம் மற்றும் புரட்சியில் இருக்கின்ற சுழற்சி மற்றும் திருப்பங்கள் காரணமாகவும், முதலாளித்துவத்தின் சரிசமமற்ற வளர்ச்சிப்போக்கின் காரணமாகவும் மிகமுக்கியமாக விவாதிக்கப்படவேண்டிய பிரச்சினை என்பது, எந்தவர்க்கம் அல்லது எந்த வர்க்கங்கள் அதிகாரத்தில் இருக்கின்றன என்ற கேள்வி குறித்த பிரச்சினையாகும். இந்த உண்மையினைப் புரிந்து கொள்வதில் ஏற்படும் தோல்வி பொருளாதாரத் தீர்மானவாதம் மற்றும் பல்வேறுபட்ட திருத்தல்வாத சிந்தனைப்போக்கின் பேரபாயத்திற்கு ஆட்பட வழிவகுக்கிறது. மேலும் இது பல்வேறு விஷயங்களில் அடிக்கடி நிகழ்வதைப்போல, அரசியல் வளர்ச்சிப்போக்கானது பொருளாதார சூழ்நிலைமையின்மீது செல்வாக்குச் செலுத்துகின்றது என்ற ஒரு வரலாற்று உண்மையை மறுக்கிறது, நுணுக்கமான ஆய்வுகளுக்குச் செல்லாமலேயே இந்த அணுகுமுறையிலிருந்து சந்தேகத்திற்கிடமின்றி அரசதிகாரத்தில் இந்திய பூர்ஷ்வாவர்க்கம் நுழைந்துவிட்டது என்று சொல்லமுடியும்

நாம் தற்பொழுது, நம் நாட்டின் பொருளாதார அமைப்புமுறையின் தன்மை குறித்து சுருக்கமாக விவாதிப்போம் எல்லோரும் மிக எளிதான முறையில் இது ஒரு முதலாளித்துவ அமைப்பு முறை என்று புரிந்து கொள்கிறார்கள் ஆனால் முதலாளித்துவம் என்பதன் அர்த்தமென்ன? முதலாளித்துவத்தின் மிகச்சிக்கலான விதிகள் மற்றும் செயல்முறைப்போக்குபற்றிய கேள்விகள் அனைத்தின் விவரங்களுக்கும் நுழைந்து விவாதிப்பது இப்போது சாத்தியப்படமுடியாது எனவே எதைக் கிரகிக்காமல் முதலாளித்துவத்தின் பிரதான விதிகள் மற்றும் அடிப்படைக் குணாம்சங்கள் புரிந்துகொள்ளப்பட முடியாதோ, அந்த அம்சங்கள் குறித்து மட்டும் நான் கவனம் செலுத்திப்பேசுகிறேன். பொதுவான முறையில் உங்களின் கருத்தின்படியே முதலாளித்துவம் என்பது ஒரு பொருளாதார அமைப்பு அங்கே முதலாளிகளும் தொழிலாளிகளும் இருப்பார்கள். உற்பத்தியானது முதலாளி தொழிலாளி என்ற உறவுமுறையின் அடிப்படையில் அதிகபட்ச லாபம் சம்பாதிப்பதற்காக நடத்தப்படுகிறது. அதாவது, முதலாளி தொழிலாளிகளுக்கிடையிலான உறவுதான் உற்பத்தி உறவுகள் ஒவ்வொன்றிலும் மிகமுக்கியமன அம்சமாக இருக்கிறது. ஒருவர் உற்பத்திச் சாதனங்களுக்கு உடைமையாளராக இருக்கிறார் மற்றவர் தொழிலாளியாக அல்லது கூலிபெறுபவராக இருக்கிறார். தொழிலாளி தனது உழைப்புச்சக்தியை கூலிக்காக விற்கிறார். ஆனால் அவருக்கு முதலாளி கொடுக்கும் சம்பளம் நியாயமானதா இல்லையா என்பதை, எந்த சமூகநீதிக் கோட்பாட்டுக்கு உகந்தவகையில் தீர்மானிப்பது என்பதில் திட்டவட்டமான நிலைபாடு இல்லாத காரணத்தால் அது

தொடர்ச்சி 7ம் பக்கம்

# 137வது மே தினம் வெல்லட்டும்

மே தினத்தின் 137வது நினைவுதினத்தை அனுசரிக்கும் வேளையில் இன்றைய தொழிலாளர்களின் நிலை என்ன? போராடிப் பெற்ற 8 மணிநேர வேலை, வார விடுமுறை, குறைந்தபட்ச ஊதியம், பென்ஷன், போனஸ், பி எஃப், சங்கம் சேரும்உரிமை என அனைத்து உரிமைகளையும் இழந்து நிற்கிறது தொழிலாளி வர்க்கம். போராடி பெற்ற உரிமைகளைப் பறித்தும் உழைக்கும் மக்கள்மீது கொடுந் தாக்குதல்களை தொடுத்து, ஏகபோக முதலாளிகளின் நலனையே காத்தது காங்கிரஸ் ஆட்சி.

'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நல்ல காலம் பிறக்கும்' என கடந்த 2014ல் வாக்குறுதியளித்து ஆட்சிக்குவந்த பாரதிய ஜனதா கட்சி முந்தைய காங்கிரஸ் ஆட்சியைக் காட்டிலும் கொடூரமாக, படுபயங்கரமாக உழைக்கும் மக்கள்மீது தாக்குதல்களைத் தொடுத்து வருகிறது. 44 தொழிலாளர் நலச் சட்டங்களை சீரழிக்கும் சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. நிரந்தரப் பணி நியமனம் எங்கும் இல்லை. Fixed Term Employment என்று குறித்த காலத்திற்கு மட்டுமே பணியமர்த்திக் கொள்ள சட்டமியற்றப்பட்டுள்ளது. நெய்வேலி நிலக்கரி சுரங்கம், சேலம் இரும்பாலை போன்ற மக்கள் சொத்தான பொதுத்துறை நிறுவனங்கள் தனியாருக்கு தாரை வார்க்கப்படுகின்றன.

இந்த கேடுகெட்ட முதலாளித்துவ அமைப்பை தூக்கியெறிந்து சுரண்டலற்ற சோசலிச சமுதாயத்தை படைப்போம். 'உலகை மாற்றுவதற்கு முன் தொழிலாளி வர்க்கம் முதலில் தம்மை மாற்றிக் கொள்ளவேண்டுமென' நமது ஆசான் மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களின் கூற்றுப்படி தொழிலாளர், விவசாயிகள் என உழைக்கும் வர்க்கமாகிய நாம் ஜாதி, மத, மொழி, இன பேதம் கடந்து ஓரினமாய் ஒன்றிணைவோம். மேதினத்தின் உரிய படிப்பினைகளை கற்றுணர உறுதியேற்போம்.

இவ்வருடம் மே தின நிகழ்ச்சிகள் தமிழகத்தின் பல இடங்களில் சிறப்பாக நடத்தப்பட்டன

### சென்னையில்137 வது மே தின பொதுக்கூட்டம்

சென்னை வியாசர்பாடி எம்கேபி நகரில் 137வது மே தினத்தை முன்னிட்டு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சென்னை மாவட்ட ஏஐயுடியூசிஇன் செயலாளர் தோழர் சடையாண்டி தலைமை தாங்கினார். ஏஐயுடியூசியின் தோழர்கள் சாய்குமார், ராஜேந்திரன் உரையாற்றினார்கள் இறுதியில் ஏஐயுடியூசியின் மாநில தலைவர் தோழர் அனைவரதன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். தோழர் உரையில் எட்டு மணிநேர வேலை நேரத்தை மே தின தியாகிகள் வென்றெடுத்ததை குறித்தும் இன்று அது பறிபோய் விட்டதை விளக்கியும் வெளிநாட்டு உள்நாட்டு மூலதனம் குவிதலை குறித்தும் அது எவ்வாறு வேலை வாய்ப்பினை பறிக்கிறது என்பதையும் விளக்கி பேசினார். மேலும் அனைத்துத் தொழிலாளர்களும் இயக்கங்கள் கட்டி இதற்காக போராட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.




சென்னை

இது தவிர சென்னையில் கொருக்குப்பேட்டை மீனம்பாள் நகர் பாலத்தின் கீழ் மே தினம் கொடியேற்றி ஏஐயுடியூசியின் தோழர் தோழர் சடையாண்டி உரையாற்றினார். மேலும் மாவட்ட குழு உறுப்பினர்கள் தோழர்கள் ராஜ்குமார் கோவிந்தராஜ் உரையாற்றினாரா ஆட்டோ டிரைவர்களும் அமைப்புசாரா தொழிலாளர்களும் திரளான அளவில் கலந்து கொண்டார்கள்.

இது போன்ற பொதுக்கூட்டம் சேலம் மாவட்டம் மல்லூரில் நடைபெற்றது. சேலம் மாவட்டம் ஏஐயுடியூசியின் மாவட்ட செயலாளர் தோழர் பி மோகன் தலைமை தாங்கினார். ஏஐயுடியூசியின் மாநில துணைத்தலைவர் தோழர் பி பாண்டியன், ஏஐகேகேஎம்எஸ் மாநில உறுப்பினர் தோழர் நடராஜன் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

### தேனி மாவட்டம் அல்லிநகரம் பகுதியில் மே தின கூட்டம்

தேனி மாவட்டம் அல்லி நகர பகுதியில் மே தின கூட்டம் சிறப்பாக நடைபெற்றது இக்கூட்டத்தை இப்பகுதியில் சுமைதூக்கும் தொழிலாளர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது, கூட்டத்திற்கு சுமைதூக்கும் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் தோழர் முருகேசன்




தேனி




சேலம்



வானூர், விழுப்புரம் மாவட்டம்

தலைமை தாங்கினார். ஏஐகேகேஎம்எஸ் மாநில செயலாளர் தோழர் சுருளியாண்டவர் கலந்துகொண்டு உரையாற்றினார். ஏஐயுடியூசியின் மாநில செயலாளர் தோழர் வி சிவகுமார் சிறப்புரை ஆற்றினார். சிறப்புரையில் தொழிலாளர்கள் கூலி உயர்வு, போனஸ் போன்ற சொந்த கோரிக்கைகளுக்கு மட்டும் போராடினால் போதாது. மத்திய, மாநில அரசாங்கங்கள் கொண்டு வரும் தொழிலாளர், மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிராக போராட முன் வர வேண்டும் அதற்கான அரசியல் இயக்கங்களை கட்ட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். கூட்டத்தில் முடிவில் தோழர் சரவணன் நன்றி உரை ஆற்றினார்.

மேலும் விழுப்புரம் மாவட்டம், வானூர் தாலுகா, ஆரோபுட்டில் உள்ள IBPL தொழிற்சாலையில் உள்ள IBPL சுமைப்பணி தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற மே தின விழாவிற்கு தோழர் ஏழுமலை தலைமை தாங்கினார். ஏஐயுடியூசி தொழிற்சங்க கொடியை புதுச்சேரி மாநில செயலாளர் தோழர் எஸ் சிவக்குமார் ஏற்றி வைத்தார். தோழர் டி தேவநாதன் கலந்து கொண்டார். தோழர்கள் முருகதாஸ், திருமலை, ஆட்டோ டிரைவர்களும் அமைப்புசாரா தொழிலாளர்களும் திரளான அளவில் கலந்து கொண்டார்கள்.

அனைத்து இடங்களிலும் மே தின தியாகிகள் ஸ்தூபியும், கொடியேற்றமும் நடைபெற்றது. தொழிலாளர்கள் திரளான அளவில் கலந்து கொண்டர்கள் ■

# புதுச்சேரியில் மே தினம் அனுசரிப்பு

புதுச்சேரி மாநிலம், மண்ணாடிப்பட்டு கொம்யூன், காட்டேரிக் குப்பத்தில் உள்ள ரவிக்குமார் டிஸ்டிலரீஸ் லிமிடெட் தொழிற்சாலையில் மே தின நிகழ்ச்சிக்கு ரவிக்குமார் டிஸ்டிலரீஸ் தொழிலாளர்கள் சங்கத்தின் செயலாளர் தோழர் எஸ் விநாயக முருகன் தலைமை தாங்கினார். சங்கத்தின் கொடியை தோழர் எஸ் சிவக்குமார் ஏற்றி வைத்தார். நிகழ்ச்சியில் தோழர்கள் தேவநாதன், மணிமேகலை, ஜெயா, தனலட்சுமி, தங்கம், பிரேமா, முனியம்மாள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



புதுச்சேரியில் மே தின கொடியேற்றம்

புதுச்சேரி மாநிலம், நேரு வீதி மிஷன் வீதி சந்திப்பில் மே தின கொடியை ஏஐயுடியூசி புதுச்சேரி மாநில தலைவர் தோழர் சங்கரன் கொடியை ஏற்றினார். நிகழ்ச்சியில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் புதுச்சேரி மாநில செயலாளர் தோழர் லெனின்துரை, தோழர்கள் சீனு (எ) சிவசங்கர், ஹரிஷ், மனோகர், சுதாகர் மற்றும் மார்க்சிய பொதுவுடமை கட்சியின் செயலாளர் திருநாவுக்கரசு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி, சேதராப்பட்டு தொழிற்சாலை எஸ்டேட்டில் ஏஐயுடியூசி மாநிலக் குழு சார்பாக மே 1 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டதிற்கு மாநிலத்தலைவர் தோழர் சங்கரன் தலைமை தாங்கினார். மாநிலச் செயலாளர் தோழர் சிவக்குமார், துணைச் செயலாளர் சீனு, எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட் ) மாநிலச் செயலாளர், தோழர் லெனின்துரை, விழுப்புரம் மாவட்ட ஏஐடிஒய்ஓ செயலாளர் தோழர் கலை, ஆகியோர் உரையாற்றினர் ■




புதுச்சேரியில் மே தினக்கூட்டம்

# திமுக அரசாங்கத்தால் 12 மணிநேர வேலை மசோதா சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதும்–திரும்பப்பெறப்பட்டதும்

சென்ற ஏப்ரல் மாதத்தின் இறுதியில், தொழிற்சாலைகளில் வேலைநேரத்தை 8 மணி நேரத்திலிருந்து 12 மணிநேரமாக அதிகரித்து தொழிற்சாலை சட்டம் 1948ல் திருத்தம் செய்யும் மசோதாவை தமிழக சட்டப்பேரவை கூட்டத்தின் கடைசி நாளன்று திமுக அரசாங்கம் எந்த ஒரு விவாதமுமின்றி குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றியதையும் அதனால் மக்களிடம் உருவான கடுங்கோபமும் தொழிற்சங்கங்களின் எதிர்ப்பும் அச்சட்டத்தை வாபஸ் பெற வைத்ததையும் மக்கள் தொடர்ச்சியாகக் கவனித்தனர். தொழிற்சங்கங்களும் பல அரசியல் கட்சிகளும் இச்சட்டத்திற்கு எதிராகக் கருத்து தெரிவித்ததால் வாபஸ் பெற்றோம் என முதல்வர் திரு ஸ்டாலின் அறிவித்தார். 'திரும்பப் பெறுவதை நாங்கள் அவமானமாகக் கருதவில்லை, அதில் பெருமைப்படுகிறோம்' என்றும் அவர் தனக்குத் தானே சான்றிதழ் வழங்கிக் கொண்டார்.

அதேசமயம் ஏப்ரல் 21 அன்று சட்டசபையில் 17 சட்ட மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் ஊரக, நகராட்சி அதிகாரத்திற்கு உட்பட்ட மக்கள் பயன்பாட்டில் இருக்கும் நீர்நிலைகளை தனியாருக்குத் தாரைவார்க்கும் மிக மோசமான 'சிறப்புத் திட்டங்களுக்கான தமிழ்நாடு நில ஒருங்கிணைப்புச் சட்டமும்' அடங்கும். தொழில் வளர்ச்சி என்ற பெயரில் தனியாருக்கு ஏரி குளம் வாய்க்கால்களை உடைமையாக்க இச்சட்டம் வழிவகுக்கிறது. 12 மணி வேலை நாள் சட்டத்தைக் கண்களுக்குக் காட்டி, பேரபாயமிக்க இச் சட்டத்தை மூடி மறைத்துவிட்டனர் எனக் கூறி டெல்டா விவசாயிகள் போராடுகின்றனர். இதையும் திரும்பப் பெற்று முதல்வர் பெருமை பட்டுக்கொள்வாரா?

தொழிற்சாலை சட்ட திருத்த மசோதாவை முன் வைத்து சட்டமாக்கும் முன்பே ஏன் தொழிற் சங்கங்களிடம் கருத்து கேட்கவில்லை என்ற எளிய கேள்வி மக்கள் மனதில் எழாமலில்லை. எதிர்ப்பு வரும் எனத் தெரிந்தும், திமுக சட்டமன்றத்தில் தனக்கிருக்கும் அறுதிப் பெரும்பான்மையை வைத்து சட்டம் நிறைவேற்றிட எண்ணியது. சொல்லப் போனால் பல மக்கள் விரோத முதலாளித்துவ ஆதரவு மசோதாக்களை அப்படித்தான் நிறைவேற்றி வருகிறது.

மத்தியில் ஆளும் பாஜக இதே போன்று, விவாதங்களின்றி பெரும்பான்மையைப் பயன் படுத்தி நாடாளுமன்றத்தில் எதேச்சதிகாரமாக சட்டங்களை இயற்றுவதை திமுக தேர்தலுக்கு முன்பு எதிர்கட்சியாக இருந்த காலத்தில் இதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டித்துள்ளனர். எடுத்துக்காட்டாக, கோவிட் 19 நோய்த் தொற்று ஊரடங்கு காலகட்டத்தில் மத்திய பாஜக அரசாங்கம் 44 தொழிலாளர் நலச்சட்டங்களை 4 தொகுப்புகளாக்கி தொழிலாளர் உரிமைகளைப் பறித்தது உட்பட பல மக்கள் விரோதச் சட்டங் களை விவாதங்களே இன்றி நிறைவேற்றியதை திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டித்தனர். பணி நேரத்தை 12 மணிநேரமாக அதிகரிக்கக் கூடாது என்று 2020ல் மத்திய அரசங்கத்திற்கு மு க ஸ்டாலின் கடிதம் எழுதினார். ஆனால் எதிர்க்கட்சியாக இருந்தபோது எதிர்ப்பதாக கூறிய விஷயத்தை இன்று ஆளுங்கட்சியாக வந்தபிறகு, ஃபாசிச பாஜகவைப் போன்றே எந்தஒரு விவாதமுமின்றி சட்டப்பேரவையில் பெரும் பான்மையை பயன்படுத்தி குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றியது. ஆக, பாஜகவின் இந்துத்துவ மாடலுக்கும் திமுகவின் திராவிட மாடலுக்கும் என்ன வேறுபாடு உள்ளது?

### 12 மணி நேர வேலை நாள் என்பது இந்திய ஏகபோக முதலாளிகளின் கோரிக்கை

உலகில் முதலாளித்துவம் தோன்றி அசுர வளர்ச்சி பெற்று வந்த 18, 19ஆவது நூற்றாண்டுகளில் தொழிற்சாலைகளில் சிறைவைக்கப்பட்டதைப் போன்ற சூழலில் 12, 14 மணி நேரத்துக்கும் அதிகமாக தொழிலாளர்கள் சுரண்டப்பட்டும், ஓய்வும் உறக்கமும் இன்றியும், வதைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிராக உருவான மனித உரிமைப் பிரகடனமே எட்டு மணிநேர வேலை. சிகாகோவின் ஹே மார்க்கெட் சந்தை சதுக்கத்தில் தங்களது குருதியைச் சிந்தியும், தடியடி, குண்டுவீச்சுகளை எதிர் கொண்டும், உயிரைகொடுத்தும், தொடர்ந்து நெடுங்காலம் போராடிப் பெற்றது எட்டுமணி நேர வேலை. சர்வதேச அளவிலும், சர்வதேச அமைப்பு களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது எட்டு மணிநேர வேலை. 137 ஆண்டுகளுக்கு முன்பு சிகாகோ போராட்டத்தை நினைவு கூர்ந்து 8 மணி நேர வேலை நாளை பிரகடனம் செய்து அறிவிக்கப்பட்டதுதான் வரலாற்றுச் சிறப்பு மிக்க மே தினம்.

மேலும் உலகில், சோசலிசம் தோன்றி பல ஐரோப்பிய கிழக்காசிய நாடுகள் சோசலிச அரசுகளாக, அமெரிக்க ஏகாதிபத்திய முகாமிற்கு எதிராக சக்தி வாய்ந்த சோசலிச முகாமாக மாறிய பிறகு உலகத் தொழிலாளர்களுக்கு பல்வேறு உரிமைகளை வழங்கும் நிர்ப்பந்தத்திற்கு முதலாளிகள் ஆளாகினர். தற்போது சோசலிச முகாம் இல்லை. சோவியத் யூனியனும் சோசலிச சீனாவும் இன்று ஏகாதிபத்திய நாடுகளாக மாறி தத்தமது தொழிலாளர்களை கடுமையாகச் சுரண்டுகின்றன. எனவே, இலாபப் பசி கொண்ட தொழில் முனைவோர்கள் உட்பட ஏகபோக கார்ப்பொரேட் முதலாளிகளும் மீண்டும் தொழிலாளர்களை அதிகப் பட்சம் சுரண்ட நடவடிக்கை எடுக்கின்றனர். கொரோனா ஊரடங்கு அவசரநிலையைப் பயன்படுத்தி பல நாடுகளும் இந்தியாவில் பாஜக அரசாங்கமும் வேலை நேரத்தை 12 மணியாக மாற்றி 2020இல் அவசரச் சட்டம் (ஆர்டினன்ஸ்) கொண்டு வந்தன.

தொழிற்சாலை சட்டங்கள் மாநிலப் பட்டியலில் இருப்பதால் எல்லா மாநில அரசாங்கங்களும் 12 மணி நேர வேலை நாள் என திருத்தம் கொண்டு வர மத்திய அரசாங்கம் வழிகாட்டுதல் கொடுத்துள்ளது. அதன்படி பாஜக ஆளும் குஜராத் மஹாராஷ்டிரா மட்டுமல்ல காங்கிரஸ் ஆளும் ராஜஸ்தான் இமாச்சல், இரண்டாண்டு களுக்கு முன் பஞ்சாப் என பத்து மாநிலங்களில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கர்நாடகாவில் பாஜக அரசாங்கம் சட்டமாக நிறைவேற்றியுள்ளது. கேரளாவில் சிபிஎம் தலைமையிலான இடதுசாரி அரசாங்கம் போக்குவரத்துத்துறை ஊழியர்கள் 12 மணி நேரம் வேலை செய்ய இச்சட்டத்தை கொண்டுவந்துள்ளது.

### இச்சட்டத்தை கொண்டுவந்ததன் காரணம்

சமீபகாலமாக தமிழகத்தில் முதலீட்டை ஈர்க்கிறோம் என்ற பெயரில், பல நாடுகளில் தொழிலாளர்களைச் சுரண்டிக் கொடுமைபடுத்திய நிறுவனங்களை திமுக அரசாங்கம் வரவேற்றுக் கொண்டிருக்கிறது. தைவானிலிருந்து விரட்டப் பட்ட பிகாட்ரான் கார்ப்பொரேஷன், லக்ஷேர் தைவான், ஆப்பில் கைபேசிக்கு உபகரணங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள், ஃபாஸ்கோன், சால்காம்ப், OLA எலெக்ட்ரிக்ஸ் மற்றும் இந்திய ஏகபோகங்களான டாடா எலெக்ரானிக்ஸ், சன் எடிசன் போன்ற 30க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் ஓசூர் கிருஷ்ணகிரி பகுதிகளில் வருகின்றன. இவை 24 மணி நேர அசெம்பிளி லைன் பணிகளைச் செய்யும் நிறுவனங்கள். எனவே 8 மணிநேர 3 ஷிஃப்ட் பணியை 12மணி நேர 2 ஷிஃப்ட் பணிகளாக மாற்றவும் நெகிழ்வுத் தன்மையுள்ள (ஃபிளெக்சிபிள்) பணிநேரத்தையும் அரசாங்கத்திடம் கோரியுள்ளன. மேலும் திருப்பூர், கோவை உள்ளிட்ட நகரங்களிலும் 12 மணி நேர வேலைநாள் பயனளிக்கும் என்பதால் தமிழ்நாடு தொழிற்சாலை சட்டத் திருத்தத்தை அங்குள்ள ஆலை முதலாளிகளும் விரும்புகின்றனர்.

இன்றைய தினம் ஆயத்த மற்றும் பின்னலாடை நிறுவனங்கள், நூற்பாலைகள், சாயப் பட்டறைகள், கட்டிடத்துறை, மருந்து தயாரிப்பு நிறுவனங்கள், மருத்துவமனைகள் என பல்வேறு தொழிற்சாலை களில் 10 மணிக்குக் குறையாமல் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்குள் வரும் எல்லா ஐடி நிறுவனங்களிலும் பிற தொழில்களிலும் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 12 மணி நேரம் வேலை செய்கின்றனர். இவர்களைப் பொறுத்த வரை எந்த சட்டமும் நடைமுறையில் பயன் பாட்டில் இல்லை. இங்கெல்லாம் தொழிற்சங்கங்கள் அமைக்க அனுமதியும் இல்லை. ஆயினும் சிஃப்ட் முறையில் இயங்கும் பல்வேறு தொழிற்சாலைகளில் சிக்கல் எழுகின்றது. ஆகவே, வேலைநேரத்தை 12மணிநேரமாக மாற்றும் சட்டத்தை கொண்டு வருவதன்மூலம் முதலாளிகள் எந்தவித சட்ட விதிகளின் சிக்கலின்றி தங்களது சுரண்டலைத் தொடரமுடியும். அதேநேரத்தில் தொழிலாளர்கள் தங்களது அனைத்துவித பேர உரிமைகளையும் சட்டஉரிமைகளையும் இழந்துவிடுகின்றனர். இந்நோக்கத்தில்தான் மத்தியில் பாஜக இச்சட்டத்தை கொண்டுவந்தது. அதேகாரணத் திற்காகதான் திமுக தமிழ்நாட்டில் கொண்டுவந்தது.

### சட்டத்தை திரும்பப் பெற்றதற்கு அரசாங்கம் கூறும் காரணம்

தொழிற்சங்கங்களும் பல கட்சிகளும் கேட்டுக் கொண்டதால் சட்டத்தை வாபஸ் பெற்றதாக மக்களிடம் தெரிவித்துள்ளது திமுக. உண்மையில் தமிழகத்தின் ஒட்டுமொத்த உழைக்கும் மக்களும் தங்களது எதிர்ப்புக் குரலை வெளிப்படுத்தினர். தொடர்ச்சியாக பல்வேறு மக்கள் விரோத திட்டங்கள் மற்றும் சட்டங்களை அமுல்படுத்திய தால் மிகக்கடுங்கோபம் கொண்டுள்ள மக்கள் 12 மணிநேர சட்ட மாசோதவை சட்டமன்றத்தில் நிறைவேற்றியவுடன் ஒட்டுமொத்தமாக மக்களும் தங்களது கோபத்தை வெளிப்படுத்தினர். இக்கோபம் போராட்டங்களாக வெடிக்கும் என்பதையும் வருவிருக்கின்ற பாராளுமன்றத் தேர்தலில் நிச்சயம் வெளிப்படும் என்பதையும் புரிந்துகொண்ட திமுக இச்சட்டத்தைத் திரும்பப்பெற்றுள்ளது.

அதே சமயம் இச் சட்டத்தைத் திரும்பப் பெறுவதால் முதலாளிகளுக்கு ஒன்றும் பெரிய நஷ்டம் இல்லை என்பதையும் அவர்களுக்கு சுட்டிக் காட்டி சமாதனப்படுத்த திமுக அரசாங்கம் தவறவில்லை. பல தொழிலாளர் விரோதச் சட்டங்கள் மட்டுமின்றி தொடர் ஷிஃப்டுகளில் பணிபுரியும் முறையை போக்குவரத்துத் துறை, மருத்துவத் துறை மின்சார வாரியம் என பல அரசு சார்ந்த துறைகளில் ஏற்கெனவே நடைமுறை படுத்தி வருகிறார்கள். அவர்களில் பெரும் பான்மையினர் தொகுபூதியத்திலும் ஒப்பந்ததாரர் களிடமும் பணியாற்றுகிறார்கள். இத்துறைகளில் 12 மணிக்கும் மேலான வேலை நேர நடைமுறையை முதல்வர் திரும்பப் பெறுவாரா?

### கட்சிகளின் செயல்பாடுகள்

தமிழ்நாடு தொழிற்சாலை திருத்த மசோதா வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு பத்து நாட்களுக்கு முன்பே முன்வைக்கப்பட்டுவிட்டது. ஆனால் அதைக் குறித்து எந்தக் கட்சியும் வாயைத் திறக்கவில்லை. மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கும் அதிமுக்கியமான இம் மசோதாவைப் பற்றி அறிந்திருந்தும் எதிர்க் கட்சிகளோ அல்லது கம்யூனிஸ்ட் என அழைத்துக் கொள்ளும் சிபிஐ, சிபிஐ(எம்) கட்சிகளோ அதன் தொழிற் சங்கங்களோ மக்களை எச்சரித்தனவா? இல்லை. சட்டமாக நிறைவேற்றிய அன்றுதான் மக்கள் இதைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்தனர். மக்களின், தொழிலாளர்களின் கோபத்தை உணர்ந்த கட்சிகளும் உடனே தங்கள் பெயரைக் காப்பாற்றிக் கொள்ள எதிர்ப்புத் தெரிவித்து வெளிநடப்பு செய்தன.

### மக்கள்–தொழிலாளர் விரோதக் கொள்கைகளை தடுத்து நிறுத்த போராட்டங்களை வலுப்படுத்தவேண்டும்

முதலாளித்துவ சந்தை சுருங்கியதால் அதை சரிக்கட்ட உலகமயக்கொள்கைகள் அமல்படுத்தப் பட்டன. ஆனால் பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் கூறியது போல 'முதலாளித்துவம் ஒவ்வொரு கணமும் கடுமையான நெருக்கடியில் சிக்குகிறது. ஒரு நெருக்கடியிலிருந்து வெளியேவர நடவடிக்கை எடுக்கிறது. ஆனால் அந்த நடவடிக்கைகளால் அது மேலும் ஆழமான நெருக் கடியில் சிக்குகிறது'. ஆம், தாராளமயம், தனியார் மயம், உலகமயக்கொள்கைகளை அமல்படுத்திய போதும் முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் சந்தை மோதல் தொடர்கிறது. மேலதிகபட்ச லாபமீட்டு வதற்காக தொழிலாளர்கள் மேலதிகபட்சமாகச் சுரண்டப்படுகின்றனர். குறைந்த தொழிலாளர்களை அதிகநேரம் சுரண்டி அதிக லாபமீட்ட

தொடர்ச்சி 7ம் பக்கம்

# தேசிய கல்விக் கொள்கை 2020ஐ எதிர்த்து பஞ்சாபில் ஏஐடிஎஸ்ஓ நடத்திய வட இந்திய மண்டல கல்வி மாநாடு





**மார்ச் 29, 2023 அன்று ஏஐடிஎஸ்ஓ வட இந்திய மண்டல மாநாட்டை பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் உள்ள பஞ்சாபி பல்கலைக்கழகம் கலாபவனில் நடத்தியது**

தேசிய கல்விக் கொள்கை *2020* (என்இபி *2020*) அறிவிக்கப்பட்ட முதல்நாளிலிருந்தே அதற்கெதிராக அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO–ஏஐடிஎஸ்ஓ) பல்வேறு வகைகளில் வலுவான எதிர்ப்பியக்கங்களை நடத்தி வருகிறது. கல்வியை முற்றிலும் தனியார்மயம், மத்தியமயம், மதமயமாக்குவதற்கான என்இபி *2020*க்கு எதிராக நாடுதழுவிய அளவில் *1* கோடி கையெழுத்து இயக்கத்தை நடத்தி நாட்டின் அனைத்து மாநிலங்களின் தலைநகர்களிலும் பேரணி நடத்தி ஆளுநர்கள் மூலமாக கையெழுத்துக்களை சமர்ப்பித்தது. அதனைத் தொடர்ந்து போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்காக *1* லட்சம் மாணவர் கமிட்டிகளையும் *25* லட்சம் மாணவர்களை தன்னார்வத்தொண்டர்களாக சேர்க்க அறைகூவல் விடுத்து செயல்பட்டு வருகிறது. இந்த நிகழ்ச்சிகளில் நாட்டிலுள்ள கல்வியை நேசிக்கும் மக்கள், மாணவர்களிடமிருந்து மிகப்பெரிய ஆதரவும் வரவேற்பும் கிடைத்துள்ளது.

இந்த இயக்கத்தின் அடுத்த கட்டமாக மண்டலங்கள் அளவில் மாநாடுகளை நடத்த ஏஐடிஎஸ்ஓ தீர்மானித்தது. முதலாவதாக வட இந்திய மண்டல மாநாட்டை பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் உள்ள பஞ்சாபி பல்கலைக் கழகம் கலாபவனில் *29* மார்ச் *2023* அன்று ஏஐடிஎஸ்ஓ நடத்தியது. இதில் பஞ்சாப், மத்தியப் பிரதேசம், டெல்லி, உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான், ஹரியாணா, இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட், சண்டிகர் மற்றும் ஜம்மு ஆகிய வட இந்திய மாநிலங்களிலிருந்து ஏராளமான மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வியை நேசிப்பவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் பங்கேற்றனர். பாட்டியாலா, பஞ்சாபி பல்கலைக்கழகத்திலிருந்து குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் மாணவர்களும் ஆராய்ச்சியாளர்களும் கலந்துகொண்டனர். பல்கலைக்கழக நுழைவுவாயிலிலிருந்து கலாபவன் நோக்கி மாணவர்கள் பேரணியாக வந்தபோது கல்வி விரோத, மாணவர் விரோத என்இபி *2020*க்கு எதிரான முழக்கங்களால் பல்கலைக் கழகமே அதிர்ந்தது. அனைவருக்கும் மதச்சார்பற்ற அறிவியல்பூர்வ ஜனநாயகபூர்வ கல்வியை வலியுறுத்தும் மாமனிதர்களின் பொன்மொழிகள் மற்றும் புகைப்படக் கண்காட்சியை அமிர்தசரஸ் ஜிஎம்சியின் முன்னாள் பேராசிரியரும் பஞ்சாப் மாநில அகில இந்திய கல்விப்பாதுகாப்பு இயக்கத்தின் தலைவருமான முனைவர் ஷியாம் சுந்தர் தீப்தி தொடங்கி வைத்தார்.

மாநாடு இரண்டு அமர்வுகளாக நடைபெற்றது. முதல் அமர்வில் முனைவர் ஷியாம் சுந்தர் தீப்தி, மத்தியப் பிரதேசத்தை சேர்ந்த புகழ்பெற்ற கவிஞர் சுரேந்திரா ரகுவன்ஷி, பஞ்சாப் அரசு கல்லூரிகள் கௌரவ உதவி பேராசிரியர் அசோசியேசன் மற்றும் அகில இந்திய நிரந்தரமல்லா கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினருமான ஹக்கும் சந்த், உத்தரகாண்டை சேர்ந்த புகழ்பெற்ற கவிஞர் பால்லி சிங், பஞ்சாபி பல்கலைக்கழகத்தின் ஷாகித் கர்ட்டார் சிங் ஷாரபா இருக்கையின் தலைவர் பேராசிரியர் பிம் இந்தர் சிங், மெடிகல் சர்வீஸ் சென்டரின் செயலாளரும் மக்கள் சுகாதார இயக்கத்தின் புகழ்பெற்ற தலைவருமான டாக்டர் அன்சுமன் மித்ரா, பஞ்சாபி பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சார்பில் பேராசிரியர் பல்விந்தர் சிங் திவானா, ஏஐடிஎஸ்ஓ அகில இந்தியத் தலைவர் வி என் ராஜசேகர் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் ஓய்வு பெற்ற பேரா ஷமன் லால், டெல்லி பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியர் நரேந்திர சர்மா போன்ற புகழ்பெற்ற கல்வியாளர்கள் அனுப்பிய செய்திகள் மாநாட்டு அமர்வில் வாசிக்கப்பட்டன.

தேசிய கல்விக் கொள்கை *2020* கல்வியை தனியார்மயம், வியாபாரமயம், மதமயம், மத்தியமயம், தொழில்மயமாக்குவதற்கான திட்ட வரைபடம் என்று மாநாட்டில் பேசிய அனைவரும் ஒரே குரலில் பேசினர். மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் இக்கொள்கையை விடாப் பிடியாக அமல்படுத்தி வருகின்றனர் என்று கூறினர். என்இபி *2020*க்கு எதிராகவும் பொதுக்கல்வியைப் பாதுகாப்பதற்காகவும் நாடுமுழுவதுமுள்ள கல்வியை நேசிப்பவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள், பெற்றோர்கள் என அனைவரும் முன்வரவேண்டும் என்று அறைகூவல் விடுத்தனர். சிறப்புரை ஆற்றிய அனைவருக்கும் நினைவுப் பரிசுகளை ஏஐடிஎஸ்ஓ அகில இந்தியத் தலைவர்கள் வழங்கினர்.

இரண்டாவது அமர்வில் ஏஐஎஸ்எஃப், பிஎஸ்யு, எஸ்எஃப்ஐ, பிஎஸ்யு(லால்கார்), பிஆர்எஸ்யு, பிஎஸ்யு(ஷாகீத் ரந்தாவா) போன்ற இடதுசாரி முற்போக்கு மாணவர் சங்கத்தலைவர்களும் ஏஐடிஎஸ்ஓ பஞ்சாப் மாநில பொறுப்புத் தலைவர் ஷிபாஷிஸ் பிரகராஜ் ஆகியோர் தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராகப் பேசினர். சகோதர மாணவர் சங்கத்தலைவர்களுக்கு பல்வேறு பல்கலைக்கழகங்களிலிருந்து வந்திருந்த மாணவர்கள் நினைவுப் பரிசுகளைகளை வழங்கினர்.

இந்த மாநாடு தொடங்குவதற்கு முன்பு பஞ்சாபி பல்கலைக்கழகத்தைப் பாதுகாப்பதற்காக பஞ்சாபி பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் அழைப்புவிடுத்த வேலைநிறுத்தத்தில் ஏஐடிஎஸ்ஓ பங்கேற்றது. இந்த இயக்கத்திற்கு ஆதரவாக *6* ஏப்ரல் *2023* அன்று நாடுமுழுவதும் போராட்ட ஆதரவு தினத்தை அனுசரிக்க ஏஐடிஎஸ்ஓ அழைப்பு விடுத்தது.

மாநாட்டிற்கு ஏஐடிஎஸ்ஓ பொதுச் செயலாளர் சௌரவ் கோஷ் தலைமை வகித்தார். தேசிய கல்விக் கொள்கைக்கு எதிரான தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. உண்மையான இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகள் ஒன்றுபட்டு நாடுதழுவிய இயக்கத்தை நடத்த வேண்டும் என்று மாநாட்டுத் தலைவர் அறைகூவல் விடுத்தார். கல்வியையும் மனிதகுலத்தையும் பாதுகாக்க என்இபி *2020*க்கு எதிராக ஒன்றுபட்ட வெகுஜன இயக்கத்தை கட்டியெழுப்புவோம் என்று அனைவரும் சபதமேற்றனர் ■

# மின் நுகர்வோர் அகில இந்திய முதல் மாநாடு





**ஏப்ரல் 8–9, 2023 மத்திய பிரதேச மாநிலம் போபாலில் நடைபெற்ற மின் நுகர்வோர் அகில இந்திய முதல் மாநாடு**

மின்துறையை ஒட்டுமொத்தமாக தனியாருக்கு தாரைவார்க்கும் மின் மசோதா *2022*ஐ எதிர்த்து மின் நுகர்வோர் அகில இந்திய மாநாடு மத்திய பிரதேச மாநிலத்தில் போபாலில் ஏப்ரல் *8–9, 2023*இல் நடைபெற்றது. இந்திய முழுவதும் வந்து இருந்த பிரதிநிதிகள் முதல்நாள் பேரணியாகவும் இரண்டாவது நாள் பிரதிநிதிகள் மாநாடும் நடைபெற்றது.

அம்மாநாட்டில் நவீன மனித வாழ்க்கையின் தவிர்க்க இயலாத தேவைப் பொருளாக விளங்கும் மின்சாரத்தை முழுவணிகச் சரக்காக மாற்றி தனியாரின் கைகளில் ஒப்படைக்கும் வகையில் கொண்டுவந்துள்ள மின்சாரச் சட்டத் திருத்தங்களை திரும்பப் பெறச் செய்ய நுகர்வோர் போராட வேண்டியதை மாநாடு வலியுறுத்தியது. மின் கட்டண ஸ்மார்ட் மீட்டர் வைப்பதையும் கைவிடக்கோரியது ■

# எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் 76வது ஸ்தாபக தின அறைகூவல் . . .

*1ம் பக்கத் தொடர்ச்சி*

அரசாங்கத்தைப் போலவே தற்போதைய திமுக அரசாங்கமும் அமுல்படுத்திவருகிறது என்பதையும் சுட்டிக் காட்டினார். தோழர் சந்திரன் தன் தலைமையுரையாற்றினார்.

இறுதியில் தன் சிறப்புரையில் மாநிலச் செயலாளர் தோழர் ரெங்கசாமி அவர்கள், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) தோன்றிய வரலாற்றை சுருக்கமாக விவரித்தார். சிபிஐ கட்சியானது, இந்தியாவில் வர்க்க குணாம்சத்தை கண்டறிவதில், சரியான மார்க்சிய கண்ணோட்டத்தை பகுத்தாராயும் முறையை, பிரயோகிக்கும் முறையை கிரகித்துக் கொள்வதில் படுதோல்வி அடைந்து விட்டது. சர்வதேச கம்யூனிச தலைமையிடம் இயக்கவியல் ரீதியான உறவை கொள்ளாமல் குருட்டுத்தனமாக கீழ்படிந்தது. கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்குவதற்கான சரியான, அறிவியல்பூர்வமான செயல்முறைப் போக்கினை பின்பற்றவில்லை. மேலும், கட்சிக்குள்ளும் வெளியிலும் சித்தாந்தப் போராட்டத்தை நடத்தாததாலும், தலைவர்கள் முதல் தொண்டர்கள் வரை குறைந்த பட்ச கம்யூனிச கலாச்சார தரத்தை கடைபிடிக்காததாலும் சிபிஐ கட்சியானது உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியாக வளராமல், முதலாளித்துவ கட்சிகளுடன் சமரசவாத கொள்கைகளுடன் செயல்பட்டது. இதனால் சிபிஐ ஒரு உண்மையான கட்சியாக வளரவில்லை. எனவே தோழர் சிப்தாஸ் கோஷ் ஒரு உண்மையான கட்சியை லெனினிச கொள்கை அடிப்படையில் தோற்றுவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆகவே 1948இல் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), கட்சியை அவர் தோற்றுவித்தார்.

இன்று மரண தருவாயில் முதலாளித்துவம் வேலையில்லாத் திண்டாட்டத்தை, கலாச்சார சீரழிவை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. 2008இல் தொடங்கிய பொருளாதார நெருக்கடி, கொரோனா காலத்தில் மேலும் தீவிரமானது. பெருகிவரும் வேலை யில்லாத் திண்டாட்டத்தைப் பயன்படுத்தி மிகக்குறைந்த சம்பளத்தில் இளைஞர்களை கடுமையாக சுரண்டுகிறார்கள். கூடவே, நுகர்வு கலாச்சாரத்தின் மூலமாகவும் மது போதையைப் பரப்பியும் இளைஞர்களிடையே முதலாளித்துவம் கலாச்சார சீரழிவை ஏற்படுத்தி வருகிறது.



**சென்னையில் ஏப்ரல் 24, 2023 அன்று நடைபெற்ற கட்சியின் ஸ்தாபக தினக்கூட்டத்தில் கலந்துகொண்டோர்**

இன்று உலகம் முழுவதும் முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளிடையே சந்தைப் போட்டியினால் பகுதிப்போர் நடந்துகொண்டே இருக்கிறது. ஒருபுறம் அமெரிக்காவின் தலைமையில் ஆங்கிலோ அமெரிக்கா ஏகாதிபத்தியக் குழு ஒரு துருவ உலகத்தை கொண்டுவர போர் மற்றும் பொருளாதார தடைச்சட்டத்தின் கீழ் பிற நாடுகளை பணியவைக்க முயற்சித்து வருகிறது.

இன்னொருபுறம் ரஷ்யா, சீனா போன்ற ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளின் மற்றொரு குழு இரண்டாம் துருவ உலகத்தை அமெரிக்காவுக்கு எதிராக உருவாக்க முயற்சித்து வருகிறது. இன்று இந்த இரு துருவங்களுக் கிடையே சந்தைப் போட்டியினால், உக்ரைனை மையமாக வைத்து அமெரிக்கா ரஷ்யா போரிட்டு வருகிறது.

இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் 30% மேல் உருவாகி வருகிறது. பணவீக்கம் உயர்ந்து, விலைவாசியும் கடுமையாக உயர்ந்து வருகிறது. இச் சூழ்நிலையில் உலகில் அமைதி வேண்டியும், வேலைவாய்ப்பு கோரியும், விலைவாசி உயர்வுக்கு எதிராகவும் ஒவ்வொரு நாட்டு மக்களும் அந்தந்த நாட்டின் அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் சரியான தலைமையில் ஒன்று சேர்ந்து போராட வேண்டும். அந்த போராட்டம் சோசலிசத்தை நோக்கி செல்லவேண்டும்.

தற்போதைய உலக சூழலை மாற்றியமைக்க உலகெங்கிலுமுள்ள மக்கள் மார்க்சிசம்–லெனினிசம் சிப்தாஸ் கோஷ் சிந்தனையை கற்றுணர வேண்டுமென உழைக்கும் மக்கள் அனைவருக்கும் அறைகூவல் விடுத்து தன் உரையை தோழர் ரெங்கசாமி நிறைவு செய்தார்.

பின் சர்வதேசிய கீதம் இசைக்கப்பட்டு கூட்டம் நிறைவுற்றது ■

# இந்தியாவில் இளைஞர்கள் சந்திக்கும் பிரச்சினைகளும் தீர்வும் . . .

*3ம் பக்கத் தொடர்ச்சி*

தீர்மானிக்கப்படவியலாது. அவர் பெறுகின்ற கூலி முதலாளிகளின் விருப்பத்தைச் சார்ந்திருக்கிறது. உற்பத்தியின் மூலமாகத் தொழிலாளியின் உழைப்பிலிருந்து பெறப்படும் லாபம் அல்லது சமுதாயத்தில் உருவாக்கப்படுகின்ற ஒட்டுமொத்த செல்வத்தின் ஒருபகுதி நாட்டின் அனைத்து அம்சங்களிலுமான மேம்பாட்டிற்கும் தொழில் முன்னேற்றத்திற்கும் முதலீடு செய்தபின்பு தொழிலாளர்களுக்கே திருப்பிச் செல்லும்போது மட்டுமே நியாயமான கூலி என்பதற்கான ஒரு அளவீட்டை உருவாக்குவது சாத்தியப்படும். அதாவது சோசலிச அமைப்பில் மட்டுமே சமூக நீதிக்கு உகந்த வகையில் நியாயமான சம்பளம் கொடுக்கப்பட முடியும். அம்மாதியான சமூக அமைப்பு நிறுவாதவரையில் தனியார் உடைமை அல்லது முதலாளித்துவ அமைப்புமுறை நீடிக்கும். உடைமையாளர்கள் தொழிலாளர்களின் கூலியின் பெரும்பகுதியை அபகரித்துக் கொண்டிருப்பார்கள்.

...முதலாளித்துவ சுரண்டலிலிருந்து விடுதலை அல்லது வேலையின்மைப்பிரச்சினைக்கான தீர்வு என்பது தீர்க்கப்படமுடியாத ஒன்றாக அவ்வாறே இருந்துவரும். ஏனெனில், இவை முதலாளித் துவத்தை தூக்கியெறியும் கேள்விகளுடன் பிரிக்கவியலாதபடி இணைந்துள்ளன. ஆகையினால், நீங்கள் இளைஞர் இயக்கங்களை விழிப்புணர்வு கொண்ட அரசியல் இயக்கமாக வளர்த்தெடுக்க வேண்டும். இளைஞர் இயக்கத்தை சுரண்டப்படும் வெகுஜனங்கள் மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிச புரட்சி இயக்கத்திற்கு உகந்தவகையில் இருக்குமாறு உங்களால் வளர்த்தெடுக்க முடிந்தால் அப்போது மட்டுமே, கேடுகெட்ட கலாச்சார சீரழிவின் தாக்கத்தி லிருந்து இளைஞர்களைப் பாதுகாத்து வேலை யின்மைப் பிரச்சினையையும் தீர்க்க முடியும்.

நினைவிருக்கட்டும், சித்தாந்தமும் அடிப்படை அரசியல் பாதையும் தவறாக இருக்குமேயானால், நீங்கள் எவ்வளவுதான் ஸ்தாபன பலத்தையும் வலிமையையும் பெற்றிருந்தாலும்கூட அவை களால் எதையும் சாதிக்க இயலாது. அதன் விளைவு, தீங்குவிளைவிக்கக் கூடியதாகவே இருக்கும் ஆனால் சித்தாந்தம் மற்றும் அடிப்படை அரசியல் பாதை சரியாக இருக்குமானால் நீங்கள் இன்று என்னதான் குறைந்த ஸ்தாபன பலத்தைக் கொண்டிருந்தபோதிலும் மெதுவாகவும், படிப்படியாகவும் உங்களின் பலத்தை அதிகரித்துக் கொண்டு ஒருநாள் உங்களால் இந்த சமுதாயத்தில் ஒரு அடிப்படை மாற்றத்தைக் கொண்டுவர முடியும். ஆகையால் இந்திரா காங்கிரஸின் சோசலிச உளறலையும், போலி கம்யூனிஸ்டுகளின் மக்கள் ஜனநாயகப் புரட்சி, தேசிய ஜனநாயகப் புரட்சி ஆகிய திருத்தல்வாத அரசியலையும் முறியடிக்க அணிதிரளுங்கள். அச்சத்தை வெற்றிகொள்ளுங்கள். அனைத்து விதமான தியாகங்களுக்கும் உங்களைத் தயார் படுத்திடுங்கள். எதிர்காலம் உங்களுடையது ■

**புரட்சி ஓங்குக!**

**சோசலிசப்புரட்சி ஓங்குக!**

# திமுக அரசாங்கத்தால் 12 மணிநேர வேலை . . .

*5ம் பக்கத் தொடர்ச்சி*

முதலாளித்துவ வர்க்கம் திட்டம் தீட்டுகிறது. எனவேதான் தொழிலாளர்களின் போராடிப்பெற்ற உரிமைகளை ஒவ்வொன்றாக பறித்துவருகின்றன. முதலாளித்துவ வர்க்கத்திற்கு சேவகம் செய்யும் அரசாங்கங்களும் அதற்கான சட்டங்களை ஜனநாயகத்திற்குப் புறம்பாக யதேச்சதிகாரமாக நிறைவேற்றிவருகின்றன.

பொழுதெல்லாம் ஆலைகளில் போக்குவதால் குடும்ப உறவுகளில் மென்மைத்தன்மை மறைந்து, விரிசல்கள் ஏற்படுவதும், அடுத்த சந்ததியினரின் ஆரோக்கிய வளர்ச்சி தடைபடுவதும் இன்று சமுதாயத்தில் மிகப் பெரிய உளவியல் பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றது. வெறும் பொருளாதாரக் காரணங்களுக்காக மட்டுமல்ல, ஆரோக்கிய சமூக வளர்ச்சிக்கும் இத்தகைய சட்டங்கள் எதிர்க்கப்பட வேண்டும்.

எனவே தொழிலாளர்களுக்கும் மக்களுக்கும் ஒன்றுபட்ட போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லை. தேர்தலில் கட்சியை மாற்றி ஆட்சியை மாற்றினால் மட்டுமே பிரச்சினைகள் தீராது என்பதை அனுபவம் காட்டுகிறது. இடதுசாரி கட்சிகளின் குறிப்பாக சிபிஐ(எம்), சிபிஐ கட்சிகளின் தொண்டர்கள் தங்களது கட்சி தலைமையின் நிலைப்பாட்டை புரிந்துகொண்டு தேர்தல் பாதையிலிருந்து போராட்ட பாதைக்கு வர தத்தமது தலைமைகளுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். எனவே, இன்று சாதி மத இனம் மொழி வேறுபாடுகளைக் கடந்து வர்க்க விழிப்புணர்வோடு எழுச்சிமிக்க துணிச்சலான போராட்டங்களை மக்கள் நடத்த வேண்டும். இது ஒன்றுதான் மத்திய–மாநில அரசாங்கங்களின் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதை தடுத்துநிறுத்தவும் முடியும். உரிமைகளை மீட்டெடுக்கவும் இயலும் ■

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

புரட்சி சிந்தனை

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# டெல்லியில் மல்யுத்த வீராங்கனைகள் நடத்தும் பாலியல் வன்கொடுமைக்கு எதிரான போராட்டத்தை வலுப்படுத்துவீர்!

கடந்த ஜனவரி மாதம் நாட்டின் தலைநகரான டெல்லியின் வீதியிலேயே தேசத்திற்கு பெருமை சேர்த்து பதக்கம் வென்ற மல்யுத்த வீராங்கனைகள் வினேஷ் போகத், சாக்கி மாலிக் உள்பட மற்றும் பலர் பாலியல் குற்றச்சாட்டுக்கு ஆளானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி போராட்டம் நடத்தியது மிகுந்த மன வருத்தத்தையும் அதிர்ச்சியையும் உள்ளாக்கியது. பாலியல் குற்றச்சாட்டுக்கு ஆளான பாஜக எம்பியும் மல்யுத்த



போராட்ட களத்தில் வீராங்கனைகள்

கூட்டமைப்பின் தலைவருமான பிரிஜ் பூஷன் சரண் சிங்ஐ பதவி நீக்கம் செய்ய வேண்டும் என கோரி போராடி வருகின்றனர். இந்நிலையில் மத்திய விளையாட்டுத் துறை அமைச்சகம் ஆனது மேரி கோம் தலைமையிலான **6** பேர் கொண்ட விசாரணை குழுவை அமைத்தது. அக்குழுவும் தனது அறிக்கையை சமர்ப்பித்த பின்பும் கூட எவ்வித நடவடிக்கையும் அறிக்கையும் வெளியிடப் படவில்லை. எனவே மல்யுத்த வீராங்கனைகள் மீண்டும் தங்களது போராட்டத்தை கடந்த ஏப்ரல் **23**ஆம் தேதி ஜந்தர் மந்தரில் தொடங்கினர்.

போராட்டம் தேசிய அளவில் கவனத்தை ஈர்த்ததால் நாடுமுழுவதுமுள்ள மாணவர்களும், இளைஞர்களும், பெண்களும் இதற்கு ஆதரவாக போராட தொடங்கியுள்ளனர்.

போராட்டத்திற்கு ஆதரவாக ஏஐடிஎஸ்ஓ உள்ளிட்ட இடதுசாரி மற்றும் முற்போக்கு மாணவர் அமைப்புகள் டெல்லி பல்கலைக் கழகத்தில் போராட்டம் நடத்தியபோது அடைத்து வைக்கப்பட்டு கொடூரமாகத் தாக்கப்பட்டனர்.

போராடும் மல்யுத்த வீரர்களின் இடத்திற்கு வழங்கப்பட்டிருந்த தண்ணீர், மின்சார இணைப்பையும் டெல்லி போலீசார் துண்டித்தனர். மழையால் அவர்களது படுக்கைகள் நனைந்தால் அங்கே கட்டில்களை கொண்டுவர மல்யுத்த




வீரர்கள் முயன்றனர், ஆனால் அந்த கட்டில்களை போலீசார் வீசி எறிந்தனர். அப்போது ஏற்பட்ட தள்ளுமுல்லில் சில மல்யுத்த வீரர்கள் காயமடைந்தனர். மல்யுத்த வீராங்கனைகளை ஆண் போலீசார் தாக்கினர், சிலரை போராட்ட இடத்திலிருந்து வெளியே இழுத்துப்போட்டனர்.

இந்த போராட்டத்தை இழிவுபடுத்தி நசுக்குவதற்கு அனைத்து வழிகளிலும் பாஜக அரசாங்கம் முயற்சிக்கிறது. இது அரசின் மனிதாபிமானமற்ற மக்கள்விரோத குணாம்சத்தை எடுத்துக்காட்டுகிறது. பிரிஜ் பூஷன் சரண் சிங்கை கைது செய்து நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக ஒட்டுமொத்த அரசு எந்திரமும் அவரைப் பாதுகாப்பதோடு எதிர்ப்பு குரல்களையே நசுக்குகின்றனர்.




ஏப்ரல் 28, 2023 அன்று தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் அகில இந்திய கண்டன நாள் ஏஐடிஓய்ஓ அனுசரிப்பு

மல்யுத்த வீராங்கனைகளுக்கு ஆதரவாக மற்ற வீரர்களும் தலைநகர் டெல்லியில் வீதிகளில் இறங்கிப் போராடிவருகின்றனர். குற்றவாளிகளைக் கைதுசெய்து பதவி நீக்கம் செய்யும்வரை தொடர்ந்து போராடுவோம் என்று அவர்கள் உறுதியாக உள்ளனர். கடுமையான சூறாவளி, பலத்த மழையையும் பொருட்படுத்தாது போராடி வருகின்றனர். இது ஒரு சாதாரண தனிப்பட்ட நிகழ்வல்ல. அரசாங்கம் நடத்தும் ஒரு அமைப்பிலேயே பெண்களுக்கு பாதுகாப்பு இல்லையென்றால் வேறு எங்கு பாதுகாப்பு இருக்கும்!

போராடும் மல்யுத்த வீரர்களும் ஆதரவு தெரிவிக்கும் நாங்கள் பின்வரும் கோரிக்கைகளையும் வலியுறுத்துகிறோம்:



ஏப்ரல் 28, 2023 அன்று சென்னையில் அகில இந்திய கண்டன நாள் ஏஐடிஎஸ்ஓ அனுசரிப்பு

- இந்தியமல்யுத்தசம்மேளன தலைவரை உடனடியாக பதவிநீக்கம் செய்து சம்மேளனத்திலிருந்து நீக்கு!
- பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கு!
- பெண்களுக்கு அனைத்துவிதமான பாதுகாப்பையும் வழங்கு!




மே 4, 2023 அன்று நெய்வேலியில் அகில இந்திய ஒற்றுமை தினம் இடதுசாரி பெண்கள் அமைப்புடன் ஏஜஎம்எஸ்எஸ் அனுசரிப்பு

- நாடுமுழுவதும் போராட்டக்குரலை காவல்துறை மூலம் நசுக்குவதை நிறுத்து!

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராடும் மல்யுத்த வீரர்களுக்கு ஆதரவாக அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம் சார்பிலே ஏப்ரல் **28**ஆம் தேதி அன்றும், அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் சார்பிலே ஏப்ரல் **29**ஆம் தேதி அன்றும், அகில இந்திய ஜனநாயகம் மாணவர் சங்கம் சார்பிலேயே மே **4** ஆம் தேதி அன்றும் அகில இந்திய ஒற்றுமை தினமாக நாட்டின் மூலை முடுக்கெங்கும் கண்டன ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தப்பட்டது. அகில் இந்திய ஜனநாயக இளைஞர் சங்க தோழர்களும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டதுடன் துண்டுப் பிரசுரம் வினியோகித்து மக்களிடம் பிரச்சரம் செய்து வருகின்றனர் ■

## மணிப்பூரில் ரத்தம் தோய்ந்த சகோதரச் சண்டைகள் மூட்டுவதை உடனடியாக நிறுத்தக் கோரி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

மணிப்பூரில் பட்டியலின பழங்குடியினர் பட்டியலில் தம்மைச் சேர்க்க வேண்டும் என ஒரு பிரிவினருக்கும், கூடாது என ஏற்கெனவே உள்ளவர்களுக்கும் இடையே கடுமையாக மோதிக்கொள்ளும் சூழலை மாநில அரசாங்கம் உருவாக்கியதை கண்டித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் **05.05.2023** அன்று வெளியிட்ட அறிக்கை:

“மணிப்பூரில் பழங்குடியினர், பழங்குடி அல்லாத வேறொரு வகுப்பினரை சேர்ந்த சாமானிய மக்களை பாஜக தலைமையிலான மாநில அரசாங்க ஆதரவு பெற்ற ஆயுதம் தாங்கிய கும்பல் கொடூரமாகக் கொலை செய்துள்ளதை தோழர் பிரவாஸ் கோஷ் வன்மையாகக் கண்டித்துள்ளார். இந்த வகுப்புவாத வெறியை உறுதியான நடவடிக்கைகள் மூலம் இயல்பு நிலையை விரைந்து கொண்டுவர வேண்டும் எனவும் அவர் மத்திய மாநில அரசாங்கங்களை கோரியுள்ளார். மணிப்பூர் மாநிலத்தின் அனைத்துப் பிரிவு மக்களின் நியாயமான, ஏற்றுக் கொள்ளக் கூடிய கோரிக்கைகளை செவிமடுத்து மாநில அரசாங்கம் தீர்த்து வைக்க வேண்டும் எனவும் இல்லாவிட்டால் இந்த மோதல் பரஸ்பர வகுப்புவெறி பெருந்தீயாக பற்றிக்கொண்டு விடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.” ■




ஆகஸ்டு 5, 2023 எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளர் தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டு நிறைவு சுவரெழுத்துப் பிரச்சாரம்

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம்: பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம்: ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, **ஆசிரியர்: ஆ ரெங்கசாமி**

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor: A Rengasamy**
Tel : 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**